பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 சிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: ஐப்பசி 1 (17—10—68) வியாழன் ★ வெளியூர்: ஐப்பசி 2 (18—10—68) வெள்ளி [இதழ்: 101

கேரள அரசைக் கவிழ்க்கச் சதி?

மாநிலக் காங்கிரசுத் தலைவர்கட்கு அவசர அழைப்பு

கொச்சி, அக். 17—

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைமையின் அவசர அழைப்பின் பேரில், கேரள மாநிலக் காங்கிரசுத் தலைவர் திரு. டி ஓ பாவா, விமானமூலம் டில்லிக்குச் சென்றுள்ளார். இவரது பயணத்துக்கு தனி முக்கியத்துவம் இருப்பதாகக் கூறப்படுகிறது

கேரளக் காங்கிரசின் முக்கிய பிரமுகர்களான கே. கருணாகரன் (சட்டமன்றத் தலைவர்), ஜார்ஜ் தாமஸ் (துணைத் தலைவர்), சங்கரநாராயணன் (காங்கிரசுச் செயலாளர்) ஆகியோர் ஏற்கனவே டில்லி சென்றுள்ளனர்.

திரு. பாவா, நான்கு நாட்களுக்கு முன்புதான் டில்லியிலிருந்து திரும்பினார்; அப்போது அவர், கேரள நிலவரம் பற்றி காங்கிரசுப் பெருந்தலைவர்களுடன் பேசிவிட்டு வந்தார்.

வீரம் மிக்கவர்கள்!

"மனிதத்தன்மையற்ற பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறியும் வீரம் மிக்க நபர்கள்தான் சீர்திருத்தம் செய்திருக்கிறார்கள்."

—காந்தியார்

நவ. முதல் வாரத்தில் தாயகம் திரும்புகிறார் அறிஞர் அண்ணா

என். வி. நடராசனுக்கு எழுதிய கடிதத்தில் தகவல்

கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கட்கு அறிஞர் அண்ணா அவர்கள், 10—10—68-ல் எழுதியுள்ள கடிதத்தில், தம் உடல் நிலை தேறிவருவதாகவும், நவம்பர் முதல் கிழமை தாயகம் திரும்ப விருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள்.

சென்னை மாநகராட்சித் தேர்தல் நடைபெறும் வேளையில் தாமும் இருந்து தம் பங்கினைச் செலுத்த இயலாதது குறித்துப் பெரிதும் வருந்துவதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள். கடிதம் வருமாறு:—

அன்புள்ள என்.வி.என். அவர்களுக்கு!

தங்கள் கடிதம் கிடைத்தது; செய்திகளை அறிந்து மகிழ்ச்சியடைந்தேன்.

என் உடல் நிலை நல்ல முறையில் இருந்துவருகிறது. உணவு உட்கொள்ளும் முறைக்காகவும் வலிவு பெறுவதற்கும் இங்கே இந்தத் திங்கள் முழுவதும இருப்பது தேவையென்று டாக்டர் மில்லர் கூறியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

மணிப்பூர்

மாநிலக் கோரிக்கை

★

இம்பால், அக். 17—

"முழு உரிமை பெற்ற மணிப்பூர் மாநிலம் அமைக்க வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தி, அக். 15-ல், 12 மணிநேர கடையடைப்பு — வேலைநிறுத்தம் நடைபெற்றது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமைக் கழக அறிக்கை எண்: 1/68

ஒழுங்கு நடவடிக்கை

சென்னை மாநகராட்சித் தேர்தல் குறித்துத் தங்கள் தங்கள் வேட்பாளர் விண்ணப்பத் தாள்களில் தலைமைக் கழகத்திற்குக் கொடுத்த உறுதிமொழியை மீறியும், கழகச் சட்ட திட்டங்களுக்கு முரணாகவும், கழகக் கட்டுப்பாட்டினைச் சீர்குலைக்கும் வகையிலும், தவற்றிலிருந்து திருத்திக்கொள்வதற்குத் தலைமைக் கழகம் அடுத்தடுத்து அளித்த வாய்ப்புகளைப் புறக்கணித்தும், சென்னை மாநகராட்சித் தேர்தலில் கழக வேட்பாளர்களை எதிர்த்துச் சுயேச்சையாகப் போட்டியிடும் கீழ்க்காணும் கழக உறுப்பினர்கள்மீது கழகச் சட்ட திட்டம்—விதி 31 — பிரிவு 12-இன்படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

கீழ்க்காணும் தோழர்கள், கழகத்தின் சாதாரண உறுப்பினர் பொறுப்பிலிருந்தும், மற்றும் கழக அமைப்புக்களில் அவரவர் வகிக்கும் நிர்வாகப் பொறுப்புக்களிலிருந்தும் இன்று முதல் ஐந்து ஆண்டுக் காலத்திற்கு அறவே நீக்கப்படுகிறார்கள் என்பது, இதன்மூலம் அறிவித்துக் கொள்ளப்படுகிறது.

வட்டம்	பெயர்
2	க. சாரங்கபாணி
13	ஈ. ஜெயகுமார்
15	ம. வே. இளஞ்சேரன் என்ற எம். வி. இராமன்
16	எஸ். காத்தலிங்கம் (எஸ். கே. லிங்கம்)
21	ஆர். ஏ. முத்து
27	எம். பி. முத்து
	என். ஏழுமலை
36	ரா. துரைராசன்
42	க. சிதம்பரம்
46	பி. ஆர். பழனிச்சாமி
60	இரா. இராமானுசம்
69	மா. வீரராகவன்
70	எஸ். ஜம்புலிங்கம்
72	கா. து. லோகநாதன்
76	மு. கிருஷ்ணன்
78	கோ. இளவரசு
93	வே. தமிழ்மணி
90	பி. இராகவேலு
98	இரா. பக்கிரி
102	எம். ஏ. துரை
108	மு. லோகநாதன்
109	மு. முனுசாமி
110	டி. நடராசன்

'அறிவகம்', சென்னை-13
17—10—68

இரா. நெடுஞ்செழியன்
(பொதுச்செயலாளருக்காக)

மாநகராட்சியில் காங்கிரசார் சாதிக்கபோவது என்ன?

அமைச்சர் மா. முத்துசாமி கேள்வி

சென்னை, அக். 17—

"காங்கிரசார், எதற்காக மாநகராட்சி மன்றத்தினைப் பிடிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்?—

"சென்னை மக்களுக்குக் குடிநீர் வசதிக்காக ரூ. 25 கோடி செலவில் வீராணம் திட்டம் போடப்பட்டிருக்கிறதே—அதனை ஒழிக்கவா?

"கூவம் ஆற்றைத் தூய்மையாக்குவதற்காக ரூ. 3 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதே—அதனை முறியடிக்கவா?

"1959-ல், ஆறாயிரம் தெரு விளக்குகள் மட்டுமே எரிந்து கொண்டிருந்தன. இன்று பதின்மூன்றாயிரம் விளக்குகளாக மாற்றியிருக்கிறோமே — அவற்றை அணைக்கவா?

"சென்ற ஆண்டில் ரூ 6 இலட்சம் செலவில் முதல் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரையில் படிக்கும் குழந்தைகட்கு இலவசமாகப் புத்தகம், சிலேட்டு, நோட்டு ஆகியவை அளித்து அதனை இந்த ஆண்டில் பரவலாக்கி ரூ. 9-இலட்சம் செலவில் 8-வது வகுப்பு வரையில் வழங்கி வருகிறோமே—அதனை நிறுத்தவா?

"கூடை வியாபாரிகளிடமும், சவரத் தொழிலாளர்களிடமும் ரூ. 7 வரி போட்டுக் காங்கிரசார் வசூலித்து வந்ததைக் குறைத்து, 'ரூ. 1 மட்டுந்தான் வரி' என்று வசூலித்து வருகிறோமே—அதனை ஒழிப்பதற்காகவா?

"காங்கிரசாரைப் போல் பெரும் பணக்காரர்களிடம் வரி வசூலிக்கத் தயங்காமல் முறையாக வரி வசூலித்துவருகிறோமே—அதனை அழித்துவிடுவதற்காகவா?

"பின் எதற்குத்தான் அவர்கள், மாநகராட்சி மன்றத்திற்கு வர விரும்புகிறார்கள்?"

—மா. முத்துசாமி
(65-வது வட்டத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில்)

காதில் விழுந்தது!

"இத்தனைச் சந்நடிகளிலும் ஒன்று உன் கவனத்தில் படுகிறதா?"

"எதைச் சொல்கிறாய்?"

"மாநகராட்சித் தேர்தல் பிரசாரத்தில் காமராசர் காட்டுகின்ற அதிதீவிர நிதானத்தையும், சுப்பிரமணியம் காட்டுகின்ற அதிதீவிர சுறுசுறுப்பையும்தான் சொல்லுகிறேன்."

"ஆமாம்; இதை நானும் நினைத்தேன்; 'சவால்—சவால்' என்று எட்டுப் பத்தித் தலைப்புகளிலெல்லாம் சுப்பிரமணியம்தான் தென்படுகிறாரே தவிர, காமராசரை ஏன் அவ்வளவாகக் காணோம்?"

"தோல்வியிலும் அனுபவப் பட்டவர் காமராசர்! தமது தோல்வியில் மட்டுமல்ல — கட்சித் தோல்வியிலும் முன்பு ஒருமுறை நேரடிப் பொறுப்புக்களைக் கட்டிக்கொண்டு கீழே விழுந்திருக்கிறார்!"

"எதைச் சொல்லுகிறீர்கள் — சென்ற மாநகராட்சித் தேர்தலைத்தானே?"

"அதுவேதான்! தேர்தலை முடித்துவிட்டு அதே சூட்டில் விமானம் ஏறி வழியில் ஐதராபாத்தில் சொன்னாரே—'தி. மு. க. பரிதாபமாகத் தோற்கும்' என்று — அப்போது 'அசிங்கமான' அவரது தேர்தல் கணிப்பு இன்னும் சரியாகவில்லை!"

"அதனால்தான், இந்தத் தேர்தலில் சற்று அமைதி கலந்த நிதானத்துடன் இருக்கிறார் என்று சொல்லுகிறாயா?"

"நான் சொல்வது என்ன — நடப்பது அதுதானே! வாரிக் கட்டிக்கொண்டு தீவிரம் காட்டுகிறார் சுப்பிரமணியம்! அவரது திறமையையும், 'இவ்வளவு'தான் எனக் காங்கிரசு மேலிடத்துக்குக் காட்டிக் கொடுப்பதற்குக் காமராசருக்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் கிட்டுமா? ஆரவாரிக்கும் சுப்பிரமணியத்தை அரங்கத்தில் விட்டுவிட்டு, அவர், 'ஆடியன்சி'ல் ஒருவராகக் கீழே — தரையில் இருக்கிறார்!"

"நீ சொல்லுவதும் சரிதான்; தோல்விச் சுமையைத் தலை மாற்றுவதற்கு இது காமராசருக்கு நல்ல சந்தர்ப்பம்தான்!"

★

"கட்சித் தொண்டர்களுக்குக் கடமையை உணர்த்த அண்ணா படம் போட்ட கழகத்தவர்களின் விளம்பரத்தை, 'சந்தைக் கடை பாணி' என்று விமர்சித்தாரே சுப்பிரமணியம் — இப்போது அவர், தம் கட்சிக்காரர்களுக்காகத் தாமே ஒரு விளம்பரத்தைத் தயாரித்திருக்கிறார்!"

"என்ன அது?"

"சொல்லுகிறேன் கேள்; அவரை நம்பி — அவரது கட்சியை நம்பி காங்கிரசுக்காரர்களுக்கு ஓட்டுப்போட வேண்டுமாம்! 'வேட்பாளர் யார் — எவர்' என்று பார்க்கத் தேவையில்லையாம்! ஏதாவது தவறு என்றால், இவர் 'ஜாமீன்' கொடுப்பாராம்! கட்சி, 'பொறுப்பு' ஏற்குமாம்!"

"ஏன் இப்படி, 'மூடிவைத்து வியாபாரம்' செய்வதுபோல் பேசுகிறாராம்?"

"தொண்டர்களுக்குக் கடமையை உணர்த்த ஒட்டப்பட்ட கழகத்துச் சுவரொட்டியை, 'சந்தைக்கடை விளம்பரமாகப்படுகிறது' என்று சலித்துக் கொண்டவர்தான் இந்தச் 'சந்துமுனை' வியாபாரப் பாணியில் சொந்தக் கட்சிக்காரர்களுக்கு ஓட்டுக் கேட்கிறார்! 'சரக்கு' மட்டம்! அதனால்தான் வியாபாரி, தனி நபர் 'ஜாமீன்' கொடுக்கிறார்!"

—எஸ்.ஆர்.

உண்மை சனநாயகம் மலர..

உத்தமர் காந்தியார் கருத்து

"மேற்கத்திய சனநாயகம் சோதனைக்குள்ளாகியிருக்கிறது; அது ஏற்கனவே தோல்வியுற்றுவிட்டது என்றுகூடச் சொல்லலாம். 'சனநாயகத்தினால் ஊழல் ஏற்படும்' என்று கூறுவது தவறு; இன்று அப்படி ஏற்பட்டிருக்கிறது என்பது உண்மைதான்.

"மேற்கத்திய நாடுகளில் உண்மையான சனநாயகம் இல்லை; 'சனநாயகம்' என்று அழைக்கிறார்கள் அவ்வளவுதான். உண்மையான சனநாயகத்தின் அடிப்படை அம்சங்கள் அங்கு இருக்கின்றன. வன்முறையை அகற்றி, தவறான நடைமுறைகளை எடுத்துவிட்டால்தான், உண்மையான சனநாயகம் இயங்க முடியும். தவறான நடைமுறைகள் வன்முறையின் மாறுபட்ட ஒரு வடிவம்தான். உண்மையான சனநாயகத்தை இந்தியா உருவாக்க வேண்டுமென்றால், வன்முறையை சற்றும் ஏற்றுக்கொள்ளக் கூடாது"

என்று, காந்தியார் கூறியிருக்கிறார். சனநாயகச் சிறப்புக் குறித்து அவர் எழுதியிருப்பதாவது :—

மக்கள் அனைவரின் உடல் வலிமையையும், பொருளாதார வசதிகளையும், ஆன்மீக ஆற்றலையும் பொது நலனுக்காக ஒன்று திரட்டிப் பயன்படுத்தும் இயல்தான் -- அந்தக் கலைதான் சனநாயகமாக இருக்கவேண்டும்.

உண்மையான சனநாயக அமைப்பில் ஒவ்வொருவரும் சொந்தமாகச் சிந்திப்பதற்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள். இந்த உண்மையான புரட்சி எவ்வாறு ஏற்படும் என்பது எனக்குத் தெரியாது; ஆனால், சீர்திருத்தம் அனைத்தும், தனி நபரது இல்லங்களில்தான் ஆரம்பமாக வேண்டும்.

ஒரு நாட்டில் உள்ள மாறுபட்ட நலன்கள் அனைத்தையும் ஒவ்வொருவரும் தம்முள் வைத்துக்கொண்டு எடுத்துச் சொல்வதுதான் சனநாயகத்தின் சிறப்பு அம்சம். தனிப்பட்ட நலன்களுக்கெனத் தனிப் பிரதிநிதித்துவம் இருக்கக்கூடாது என்பதல்ல பொருள். ஆனால், இத்தகைய பிரதிநிதித்துவம் இருந்தால்தான், அது சனநாயகம் என்று வைத்துக்கொள்ளக் கூடாது. உண்மையில் ஓர் அமைப்பின் குறையைத்தான் இது எடுத்துக்காட்டும்.

இந்தியாவின் உண்மையான சனநாயக அமைப்பில் கிராமம்தான் அடிப்படை அம்சம். 20 பேர் மையத்தில் உட்கார்ந்துகொண்டு உண்மையான சனநாயகத்தை நடத்திவிட முடியாது. ஒவ்வொரு கிராமத்தையும் சேர்ந்த மக்கள், கீழ் நிலையிலிருந்துதான் சனநாயகத்தை நடத்த முடியும்.

மக்கள் எதை நம்புகிறார்களோ -- அவர்கள் எதை விரும்புகிறார்களோ அவற்றைப் பொறுத்த வரையில், சனநாயக அமைப்பில் கோழைத்தனத்துக்கு இடமில்லை. அவர்களது கோரிக்கைகளுக்குப் பிரதிநிதிகள் உருவம் கொடுத்து, அவற்றை நிறைவு செய்யவேண்டும். இலட்சக்கணக்கான மக்களின் சாதகமான மனப்போக்கு, பல போராட்டங்களில் வெற்றி பெற உறுதுணையாக இருந்திருக்கிறது.

உண்மை சனநாயகம்

மற்றவர்களது உயிருக்கோ, சொத்துக்கோ தீங்கு விளைவிக்காமல் ஒவ்வொருவரும் தாம் விரும்பியபடி நடந்துகொள்ளக் கூடிய நிலைமை இருந்தால்தான், அது உண்மையான சனநாயகம் ஆகும். காலித்தனத்தை வைத்துக்கொண்டு பொது தர்மத்தைக் கட்டுப்படுத்த முடியாது.

மனித குலத்தில் மிகவும் வசதி குறைந்தவர்களுடன் ஒன்று சேர வேண்டும். அவர்களை விடக் கொஞ்சம்கூட சிறப்பான நிலையில் வாழ வேண்டும் என்ற விருப்பம் இருக்கக் கூடாது. அதே சமயத்தில், அந்த வாழ்க்கை நிலையை நம்மால் இயன்ற அளவுக்கு உயர்த்துவதற்கான மனப்பூர்வமான முயற்சி வேண்டும். இவை இருந்தால்தான் ஒரு சனநாயகவாதி என்று நம்மை அழைத்துக்கொள்ள முடியும்.

ஒரு சனநாயகவாதி எப்பொழுதும் ஒழுங்குக் கட்டுப்பாட்டில் நம்பிக்கை வைத்திருப்பார். மனிதன் இயற்றிய சட்டங்களுக்கு மனமுவந்து அடிபணியும் இயல்பு உள்ளவர்களுக்குத்தான் சனநாயகமுறை எளிதில் கைக்கூடும்.

சனநாயகத்திற்குத் தொண்டு செய்ய விரும்புவோர், முதலில் சனநாயகத்தின் இந்த இன்றியமையாத தன்மை இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளவேண்டும். அதோடு, ஒரு சனநாயகவாதி, தன்னலமற்ற முறையில் செயலாற்ற வேண்டும். தம்மைப் பற்றியோ, கட்சியைப்பற்றியோ அவர் சிந்திக்கக்கூடாது; சனநாயகத்தைப்பற்றித்தான் சிந்திக்க வேண்டும்; அதைப்பற்றித்தான் கனவு காண வேண்டும்.

தவறுகள் இருந்தால் அவற்றை அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவருவதோடு ஒரு சனநாயகத்தில் மக்கள் திருப்தியடைந்துவிட வேண்டும். விரும்பினால் அவர்கள் அந்த அரசாங்கத்தையே அகற்ற முடியும். ஆனால் கலவரங்களில் ஈடுபட்டு தடைகளை உருவாக்கக் கூடாது. மாபெரும் தரைப் படையையும், கடற் படையையும் கொண்ட ஒரு வெளிநாட்டு அரசு அல்ல நமது அரசு. நமது அரசாங்கம் மக்களிடமிருந்துதான் ஆற்றல் பெறவேண்டும்.

சிறுபான்மையினர் உரிமைகள்

வாக்குப் பதிவு எனும் சித்தாந்தத்தை நாம் அர்த்தமற்ற முறையில் பயன்படுத்தக் கூடாது; பெரும்பான்மையினரின் தீர்மானங்களுக்கு அடிமைகளாகி விடக் கூடாது. அப்படிச் செய்வது வன்முறையை மேலும் தீவிரமாகப் பயன்படுத்துவதற்கு ஒப்பானதாகும்.

சிறுபான்மையினரின் உரிமைகளை மதித்து நடக்க வேண்டுமென்றால், அவர்களது கருத்துக்களுக்கும், செயல்களுக்கும் பெரும்பான்மையினர் மதிப்புக் கொடுக்க வேண்டும்; சகிப்புத் தன்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

சிறுபான்மையினரின் கருத்துக்களுக்குச் செவிசாய்க்கும்படியும், அவர்கள் அவமானத்துக்குள்ளாகாமலும் பார்த்துக்கொள்ள வேண்டியது பெரும்பான்மையினரின் கடமையாகும்.

எந்த ஒரு கருத்தைக் கொண்டவர்களும் தங்களால்தான் சரியான முடிவுக்கு வரமுடியும் என்று ஏகபோக உரிமை கொண்டாட முடியாது.

நாம் அனைவரும் தவறிழைக்கக் கூடும். பலதடவை நமது முடிவுகளை மாற்றிக்கொள்ளும் கட்டாயம் ஏற்படுகிறது.

இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய நாட்டில் நேர்மையான சிந்தனை முறைகள் அனைத்துக்கும் இடமிருக்கவேண்டும்.

நமது கருத்துக்களை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென எப்படி எண்ணுகிறோமோ, அதேபோல மற்றவர்களது கருத்துக்களை நாம் புரிந்துகொள்ள முயலவேண்டும். அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லையென்றால், நம் கருத்துக்களை அவர்கள் மதித்து நடக்கவேண்டுமென எவ்வாறு எதிர்பார்க்கிறோமோ, அந்த அளவுக்கு அவற்றுக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்; இது இருந்தால்தான் வலிமைமிக்க பொது வாழ்வு இருக்க முடியும்.

ஒரு நல்ல சமூகத்தில், அவமரியாதை -- சகிப்புத்தன்மை இல்லாமை -- கொடுமை ஆகியவை இருக்கக்கூடாது. இவை சனநாயக உணர்வுக்கு முரண்பட்டவை.

மற்ற தரப்பினர் என்ன கூறுகிறார்கள் என்று தெரிந்துகொள்ள நாம் தயாராக இருக்கவில்லையென்றால், உண்மையான சனநாயகம் உருவாகமுடியாது.

அளவு எப்படியிருந்தாலும் தரம்தான் முக்கியமானதாகும். சந்தேகமும், மனக்கசப்பும், மாறுபட்ட நலன்களும், மூட நம்பிக்கையும், அச்சமும், அவநம்பிக்கையும் இருந்தால் அந்த இடத்தில் எண்ணிக்கை எவ்வளவு பெரிதாக இருப்பினும் நன்மை ஏற்படாது; அபாயம்தான் ஏற்படும்.

மிகச் சிறந்த ஒழுங்குக் கட்டுப்பாட்டுடன் ஒரே மனிதராக எல்லோரும் இயங்கினால் அத்தகைய பெரும்பான்மை எண்ணிக்கையை யாரும் எதிர்க்க முடியாது; ஆனால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கம் இழுத்துக்கொண்டு, எந்தப் பக்கம் இழுப்பது என்று தெரியாமல் சிலர் திண்டாடும்போது, 'அவர்கள் தங்களையே அழித்துக் கொள்ளும் சக்தியாகத்தான் இருப்பார்கள்!

அதிகாரமிருந்தால் அவர்கள் பார்வையற்றவர்களாகி விடுகிறார்கள்; காது கேளாதவராகி விடுகிறார்கள்; இப்படியிருக்கும்போது, அதிகார போதையுள்ள அரசாங்கம் எதைச் செய்யும் -- எதைச் செய்யாது என்று யாராலும் கூறமுடியாது.

ஓர் இலட்சிய நாட்டில் அரசியல் அதிகாரமே இருக்காது; ஆனால் இலட்சிய நாடு என்பது வாழ்க்கையில் முழுமையாய் ஏற்பட முடியாது; ஆதலால்தான் 'எந்த அரசு மிகக் குறைவாக ஆளுகிறதோ அதுவே சிறந்த அரசு' என்று தோரியோ கூறினார்.

அதிகாரத்தை எல்லோரும் பங்கிட்டுக்கொள்ள வேண்டும்; அப்போதுதான் சனநாயகம் இயங்க முடியும்; ஆனால் அதற்காக சனநாயகம் கட்டுப்பாடற்ற மக்கள் கூட்டத்தின் ஆட்சியாக மாறிவிடக்கூடாது.

சனநாயகம் ஒரு மாபெரும் அமைப்பு; ஆதலால் அதைத் தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு உண்டு. அதற்காக, சனநாயகத்தையே தவிர்ப்பதல்ல பரிகாரம். தவறாகப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களை இயன்ற அளவுக்குக் குறைக்க வேண்டும்.

பதவிகள் அனைத்தும் பறிமுதல்

ஹாங்காங், அக். 16— செஞ்சீனாவில் மா-சே-துங் தலைமையில் இயங்கிவரும் கம்யூனிஸ்டுக் கட்சியின் ஆட்சி, முன்னாள் அதிபர் லியூ, கட்சியிலும் கட்சிக்கு வெளியிலும் வகித்துவரும் பதவிகளிலிருந்து விலக்கப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறது.

'சீனக் குருஷ்சேவ்' என்று அழைக்கப்பட்டுவரும் லியூ வகித்துவந்த பதவிகள் அனைத்தும் பறிக்கப்பட்டுவிட்டன!

அதிகாரிகட்கு தமிழக அரசு உத்தரவு

அலுவலகத்திற்குக் குறித்த நேரத்தில் வரக் கோரிக்கை

சென்னை, அக். 17— "எவ்வளவு பெரிய அதிகாரியாக இருந்தாலும், குறித்த நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து—குறித்த நேரம் வரையில் அலுவலகத்தில் இருக்க வேண்டும்.

"ஆஜர் பட்டியலில் உயர்தர அதிகாரிகள், கையெழுத்திட வேண்டியதில்லை; எனினும் அவர்களும் உரிய நேரத்தில் அலுவலகத்திற்கு வந்து மற்ற சிப்பந்திகளுக்கு ஓர் உதாரணமாக இருக்க வேண்டும்"

என்று தமிழக அரசு, எல்லாத் துறை அதிகாரிகளுக்கும் அனுப்பியுள்ள உத்தரவு ஒன்றில் கூறப்பட்டிருக்கிறது.

அலுவல் நேரத்தில் பொதுமக்கள், அதிகாரிகளைச் சந்திப்பதற்கு வாய்ப்பு அளிப்பதற்கே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அரசு உத்தரவில் கூறப்பட்டிருப்பதாவது :—

"எந்த உயர்ந்த பதவியிலிருந்தாலும் அதிகாரிகள் அனைவரும் தத்தம் அலுவலகங்களில் கண்டிப்பாகக் காலை 10-30 மணி முதல் மாலை 5-மணிவரை தங்கியிருந்து அலுவல்களைக் கவனிக்கவேண்டும்.

இவர்கள், காலை 10-30 மணிக்கு முன்பு வந்ததாகக் காரணம் கூறி மாலை 5-மணிக்கு முன்போ அல்லது காலை 10-30 மணிக்குப் பிறகு வந்ததாகக் காரணம் கூறி மாலை 5-மணிக்குப் பிறகோ அலுவலகத்திலிருந்து வீட்டுக்குச் செல்வதை அரசு அனுமதிக்காது.

அரசு அலுவல் நேரமான காலை 10-30 மணிமுதல் மாலை 5-மணி வரை அதிகாரிகளைச் சந்திக்க வரும் பொதுமக்களது குறைகளைக் கேட்டறியும் பொருட்டு அதிகாரிகள் தங்கள் அலுவலகங்களில் மேற்படி நேரத்தில் இருந்தாக வேண்டும்.

காலம் தவறாமல் அதிகாரிகளும் வேலைக்கு வந்து சென்றால், அவர்களின்கீழ் பணியாற்றும் ஊழியர்களும் அதிகாரிகளின் உதாரணத்தைப் பின்பற்றுவர்.

அதிகாரிகள் உரிய நேரத்தில் அலுவலகம் வந்து செல்லும் ஒழுங்கை அவர்கள், தாங்களே கைக்கொள்ள வேண்டும் என்று அரசு விரும்புகிறது."

அதிகாரிகள், வெளியூர் சுற்றுப் பயணங்களைக் குறைத்துக் கொள்ளவேண்டும்; செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால், முன்னதாகவே தங்கள் அலுவலகத்துக்கு முன்னால் அறிவிப்பு எழுதிப் போடவேண்டும்; இப்படிச் செய்தால், கீழ் அதிகாரிகளுக்கு உதவியாக இருக்கும்; பொதுமக்கள், அதிகாரிகளைச் சந்திக்க வசதியாகவும் இருக்கும்.

ஊழியர்களும் அதிகாரிகளும் இந்த முறையில், தங்களைத் தாங்களே ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்."

சத்தியவாணிமுத்து

வெளிநாடு பயணம்

அக்டோபர் 27-ல் புறப்பாடு

சென்னை, அக். 17— செய்தித் துறை அமைச்சர் திருமதி. சத்தியவாணிமுத்து அவர்கள், இத் திங்கள் 27-ஆம் நாள் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை மேற்கொள்கிறார்.

இங்கிலாந்து, பிரான்சு, இத்தாலி, எகிப்து ஆகிய நாடுகளுக்குச் சென்று அந்நாடுகள் பெண்கள் முன்னேற்றத்திலும், குழந்தைகள் வளர்ப்பிலும் அடைந்துள்ள முன்னேற்றத்தைக் கண்டறிந்து வருவார்.

தமது சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு நவம்பர் மாத இறுதியில் தாயகம் திரும்புவார்.

வேட்பாளருக்குப் பொறுப்புத் தொகை இல்லை

ரூ.450க்குமேல் தேர்தல் செலவு செய்யக்கூடாது

பிரிட்டனில் நகராட்சித் தேர்தல் முறை

பிரிட்டனில் நகராட்சித் தேர்தலுக்கு நிற்கும் வேட்பாளர்கள், பொறுப்புத் தொகை கட்ட வேண்டியதில்லை; பொதுத் தேர்தலில் நிற்பவர்கள்தான் பொறுப்புத் தொகை கட்ட வேண்டும்.

பிரிட்டிஷ் நகராட்சித் தேர்தல் பற்றிய பிற விவரங்கள் :— பொதுத் தேர்தல் போலவே நகராட்சித் தேர்தலிலும் 21 வயது அடைந்தவர்கள்தான் வாக்கு அளிக்கலாம். தேர்தலுக்கு நிற்பவர்களும் 21 வயது முடிவடைந்தவர்களாக இருக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இடத்தின் நகராட்சி உறுப்பினர் தேர்வுக்கு நிற்கும் வேட்பாளர், அந்தப் பகுதியில் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்; அல்லது, தேர்தலுக்குமுன் ஓராண்டுக்குள் அந்தப் பகுதியில் வசித்தவராக இருக்கவேண்டும்; அல்லது அந்தப் பகுதியில் வீடு அல்லது நிலம் போன்ற சொத்துக்கள் இருக்க வேண்டும்.

நகராட்சி அலுவலகத்தில் ஊதியம் பெற்று வேலை பார்க்கும் எவரும், நகராட்சி உறுப்பினராக முடியாது.

'திவால்' ஆனவர்கள் -- முந்தின தேர்தல்களில் சட்டபூர்வமில்லாத அல்லது ஊழல் முறைகளில் ஈடுபட்டவர்கள் -- அல்லது தேர்தலுக்கு ஐந்து ஆண்டுகள் முன்பு வரை குற்றம் சாட்டப்பட்டுச் சிறை சென்றவர்கள் -- ஆகியோர் தேர்வுக்கு நிற்கும் தகுதியில்லாதவர்கள்.

நகராட்சித் தேர்தலுக்கு நிற்பவர் 25 பவுன்களுக்குமேல் (இந்தியக் கணக்கில் ரூ. 450) தேர்தலுக்காகச் செலவிடக்கூடாது.

முடிவு வெளியான 35 நாட்களுக்குள், தேர்தல் செலவு விவரத்தை அதிகாரிகளிடம் சேர்ப்பிக்க வேண்டும்.

மரண தண்டனை நீக்கப்படுமா?

புதுடில்லி, அக். 15— நியூயார்க்கில் நடைபெற்ற ஐ. நா.-பேரவையின் சமூகம்—மனிதாபிமானம் பற்றிய மூன்றாவது குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் குமாரி மேரி நாயுடு இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்படுவதுபற்றித் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு :—

"இந்தியச் சட்டத்தின்படி பொதுவான நிலைமை என்னவென்றால், கொலை செய்வது -- இந்திய அரசாங்கத்துக்கு எதிராகப் போர் தொடுக்க முயற்சிப்பது -- ஒரு போர் தொடுக்க உடந்தையாய் இருப்பது ஆகியவை போன்ற சில குற்றங்களில் மரண தண்டனை விதிப்பதற்கு இந்தியப் பீனல் கோடு வகை செய்கிறது.

எனினும், இந்தியச் சட்டம் இத்துறையில் போதிய அளவுக்கு நீக்குப்போக்குள்ளதாகவே இருக்கிறது; நீதிமன்றங்கள் தங்களுடைய நிலைமைக்கேற்ப மாற்றுத் தண்டனையாக ஆயுட்காலத் தண்டனை விதிப்பதற்கு இந்தியச் சட்டம் வகை செய்கிறது. குற்றவாளியின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு இந்தச் சட்டம் போதிய அளவுக்கு இடமளிக்கிறது. மேலும், குற்றவாளிகள் உயர் நீதிமன்றத்துக்கோ சுப்ரீம் கோர்ட்டுக்கோ மனுச் செய்து உதவி கோரலாம்.

இந்த வகைத் தண்டனை பெறுகின்ற குற்றவாளிகள், பின்னர் மாநில அரசாங்கத்துக்கும், இந்தியக் குடியரசுத் தலைவருக்கும்

(3-ம் பக்கம் பார்க்க)

குடிசை வாழ்வோர் நலனில் தமிழக அரசு காட்டும் அக்கறை

கட்டப்பட்ட வீடுகளைத் திறந்து வைத்து அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, அக். 16—

குடிசைவாழ் மக்களுக்காக வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ள 444 வீடுகளை பொதுப்பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைத்தார்.

சென்னை இந்திரா நகர்ப் பகுதியில், குடிசை வாழ்வோருக்காக 1,400 வீடுகள் கட்டத் திட்டமிடப்பட்டு இப்போது முதற் கட்டமாக இந்த வீடுகள் திறக்கப்பட்டன.

ஒவ்வொரு வீடும் ரூ. 6,500 செலவில் கட்டப்படுகின்றன.

அமைச்சர், தமது திறப்புரையில் குறிப்பிட்டதாவது:—

"காங்கிரசு ஆட்சியின்போது, வீட்டு வசதிவாரியத்தின் சார்பில் பத்தாண்டுக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகள் 4703-தான். ஆட்சிப் பொறுப்பைத் தி.மு.க. ஏற்றுக் கொண்டபின், இந்த இரண்டாண்டுக் காலத்தில் 2,624 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன.

"ஏழைகளுக்குக் குடிசைக்குப் பதிலாகத் தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித் தரும் முயற்சியில் இன்றைய அரசு ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்துக்குச் சில நிலச் சொந்தக்காரர்கள் செய்யும் இடையூறு காரணமாகவே திட்டத்தை நிறைவேற்றுவதில் சிறிது தாமதம் ஏற்படுகிறது.

"அறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய அக்கறையின் விளைவாக சென்ற ஆண்டு இந்தப் பகுதியில் பல வீடுகள் கட்டப்பட்டன. வட சென்னைப் பகுதியில் இரண்டு மாதத்தில் இரண்டாயிரம் வீடுகளைக் கட்டத் திட்டமிட்டு, இதுவரை 1,200 வீடுகள் கட்டப்பட்டுவிட்டன.

"சிக்கல் இல்லாத இடங்களைத் தேர்ந்தெடுத்து, தீப்பிடிக்காத வீடுகளைக் கட்டித்தரத் தமிழக அரசு முனைந்துள்ளது."

அமைச்சர் மாதவன்

விழாவுக்குத் தலைமை தாங்கிய சட்ட அமைச்சர் செ. மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"இயற்கையாகக் குடிசை வாழ்வோருக்குக் குடிசை கட்டித் தரும் திட்டம் ஒருபுறமிருக்க, 'திட்டமிட்டுச் செயல்படுத்த'ப்பட்ட தீ வைப்புகளால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களுக்கு எரியாத வீடுகளைக் கட்டித் தரும் பணியை, வீட்டு வாரியம் மேற்கொண்டிருக்கிறது.

கட்டிடச் செலவைக் குறைப்பதும் வீட்டு வசதி வாரியத்தின் நோக்கமாக இருக்கவேண்டும்.

வீட்டு வசதி வாரியத்துக்குப் பணம் தேவையாக இருக்கிறது; தேவையான பணத்தைப் பொதுக் கடன்மூலம் திரட்ட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது; ரிசர்வ் பாங்கி இதற்கு அனுமதியளித்திருக்கிறது; பிராவிடண்டு நிதி நிறுவனம் பணம் தர ஒப்புக்கொண்டிருக்கிறது; சுமார் ரூ. 1 கோடி கடன் எழுப்பவேண்டுமென்பது நோக்கமாகும்."

குடிசைப் பகுதிகளைச் சீரமைக்கத் திட்டம்

அரசியல் சார்பற்ற ஆலோசனை குழு நியமனம்

சென்னை, அக். 17—

1967 ஜுன்—ஜுலையில் சென்னைக் குடிசைப் பகுதிகளில் பல தீ விபத்துக்கள் ஏற்பட்டு மக்கள் உயிருக்கும் உடைமைக்கும் பெரும் சேதம் விளைந்ததைத் தொடர்ந்து சென்னை நகரிலுள்ள அரசியல் சார்பற்ற சங்கங்கள் தனித்தனியாகவோ அல்லது சில சங்கங்கள் ஒன்று சேர்ந்தோ ஒரு குடிசைப் பகுதியை மேம்பாட்டுப் பணிக்கு எடுத்துக்கொண்டு, தற்போதைய குடிசைகளுக்குப் பதில் தீப்பற்றாத பொருள்களைக் கொண்டு குடியிருப்புக்கள் அமைப்பது போன்ற மறுவாழ்வுப் பணிகளைச் செய்யலாம் என்றும், இப்படிச் சீரமைக்கும் சங்கத்தின் பெயரையே அந்தக் குடிசைப் பகுதிக்கு வைக்கலாம் என்றும், இதற்காக முதலமைச்சரின் தலைமையில் சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்டதொரு குழுவை ஏற்படுத்தலாம் என்றும் யோசனை கூறப்பட்டது.

இந்த யோசனையை அரசு பரிசீலனை செய்து, இந்தத் திட்டத்தால் சென்னை நகரம் எழில் பெறுவதுடன், குடிசைவாழ் மக்களும், அவர்களை அடுத்துள்ளவர்களும் பாதுகாப்புடன் வாழவும் இயலும் என்ற கருத்துக்கு வந்துள்ளது.

இதனையொட்டி, அரசியல் சார்பற்ற சங்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட குடிசைப் பகுதி அபிவிருத்தி ஆலோசனைக் குழு ஒன்றை அரசு நியமித்திருக்கிறது.

முதலமைச்சர், இந்தக் குழுவின் பணித்துறை சார்ந்த தலைவராக இருப்பார்; உணவு -- வருவாய்த் துறை அமைச்சர் துணைத் தலைவராகவும், மாநகராட்சி ஆணையர், போலீசு கமிஷனர், மாநில வீட்டு வசதிக் கழகத் தலைவர் ஆகியோர் பணித்துறை சார்ந்த உறுப்பினர்களாகவும் இருப்பர்.

சென்னைக் கலெக்டர் குழுவின் செயலாளர், அத்துடன் அவர் அரசியல் சார்பற்ற சங்கங்கள் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிக்காகத் திரட்டும் பொதுநல நிதியை, அரசின் ஆணையின்கீழ் நிர்வகிப்பார்.

ஆமதாபாத்தில் அண்ணா பிறந்த நாள் விழா

ஆமதாபாத்—பாபுநகர் தி. மு. கழகம், திராவிட முற்போக்கு கலைக் குழு ஆகியவை சார்பில் 19-9-68 அன்று அறிஞர் அண்ணாவின் 60-ம் ஆண்டு பிறந்த நாள் விழா நடைபெற்றது.

காலை 9-மணிக்கு வட்டச் செயலாளர் சுந்தர் குப்புசாமி கழக இல்லத்தில் விழா தொடங்கியது; விழாக் குழுச் செயலாளர் வி. ஆறுமுகம் வரவேற்றார்; விழாக் குழுத் தலைவர் பெ. இலக்குமணன் தலைமை தாங்கினார்.

தி. மு. க. செயலாளர் சு. கிருட்டினன் அண்ணா படத்தை திறந்து வைத்தார்; தோழர் நா. முனுசாமி கொடியேற்றினார்; சமால்பூர் வட்டச் செயலாளர் தி. முத்து கிருட்டினன் இனிப்பு வழங்கினார்; பாபு நகர் வட்டச் செயலாளர் மாணவ மாணவிகளுக்குப் பலகை -- பலப்பம் -- நோட்டு -- பென்சில் வழங்கினார்.

திராவிட முற்போக்கு கலைக் குழு செயலாளர் ஆ. கோபால் நன்றியுரைக்குப்பின், கழக இல்லத்திலிருந்து காலை 10 மணிக்கு சிறுவர் சிறுமியர் கும்மி-கோலாட்டத்துடன்—60 வெடி 60 கொடியுடன் — 6 அடி உயரத்தில் அலங்கரிக்கப்பட்ட அண்ணா உருவப் படம் கண்ணைக் கவரும் வண்ணத் தேரில் வைக்கப்பட்டு ஊர்வலமாகப் புறப்பட்டு பாபு நகரை சுற்றிக்கொண்டு பிற்பகல் 2 மணிக்கு அழகிரி திடலை அடைந்தது.

அண்ணா பிறந்த நாள் விழாவை முன்னிட்டு பாபு நகர் தமிழர் இல்லங்கள்தோறும் இனிப்பு--பழம்--வெற்றிலை -- பூ ஆகியவை வழங்கப்பட்டன.

மாலை 6 மணிக்கு தோழர் பெ. இலக்குமணன் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் சு. பாண்டுரங்கன், திரு. நெடுமாறன், ஆ. செந்தமிழ் செல்வன், கு. சிதம்பரம், சுந்தர் குப்புசாமி, சு. கிருட்டினன் ஆகியோர் பேசினர்.

இரவு 8-30 மணிக்கு சுந்தர் குப்புசாமி எழுதிய 'அண்ணாவுக்கு ஆயுள் தண்டனை' எனும் (கழக ஆட்சி விளக்கம்) நாடகம், திராவிட முற்போக்கு கலைக் குழுவினரால் நடைபெற்றது.

பெங்களூரில் பாரதி விழா

பெங்களூர், அக். 12—

பெங்களூர் தமிழ்ச் சங்கச் சார்பில் பாரதி விழாக் கொண்டாடப்பட்டது.

திரு.இராச. இராசமாணிக்கனார் சங்கப் பணிகளை விளக்கிப் பேசினார்; கட்டப்பட்டுவரும் சங்கக் கட்டிடம் விரைவில் உருப்பெற்று முடிவு பெற நிதி உதவுமாறு வேண்டிக்கொண்டார்.

திரு. எம். அய்யாசாமி, 'கவிதைப் பயன்' என்ற தலைப்பில் பேசினார்.

விழாவில், கவியரங்கம் ஒன்றும் நடைபெற்றது; திரு. தா. கிருட்டினமூர்த்தி தலைமையேற்றார், பேரரசிரியர் ப. பாலசுப்பிரமணியன் எம்.ஏ., புலவர் இரா. க. ச. சிவம், திரு. ஆ. சி. விசுவநாதன் ஆகியோர் கவிதையரங்கில் கலந்துகொண்டனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்கட்கு திரு. எம். அய்யாசாமி பரிசு வழங்கினார்.

திரு. நா. நீலகண்டன் நன்றி கூறினார்.

பம்பாயில் பேராசிரியர் அன்பழகன்

சிறப்பான வரவேற்பும் -- வழியனுப்பும்

வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்ட பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், 4—10—68 மாலை 4-20 மணிக்கு விமானம்மூலம் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார். ஆற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வீராசாமி, நாமக்கல் இராமசாமி ஆகியவர்களும் உடன் வந்தனர். அவர்கள் பம்பாய் தி.மு.க. தலைமைக் குழுச் செயலாளர் தொ. து. அன்புச்செழியன், மற்றும் செல்லதுரை, பி. கே. முத்தையா, பாண்டுப் பி. ஆறுமுகம், தாமசு, சி. என். மணி, பொற்கோ, சோக்கேசுவரி நாராயணசாமி, இரசாக், அப்துல் பஷீர், கொலாபா தி. மு. க. தோழர்கள், மற்றும் பெருவாரியான தோழர்கள் மலர் மாலையும் -- கைத்தறி ஆடையும் அணிவித்து வரவேற்றனர்.

அன்று மாலை 6-30 மணிக்கு பாண்டுப் தி. மு. க. சார்பில் தோழர் செல்லதுரை தலைமையில் நடைபெற்ற வழியனுப்பு விழாக் கூட்டத்தில், பேராசிரியர் அவர்களின் பயணம் சிறப்புடன் வெற்றி பெற வாழ்த்தித் தோழர்கள் தொ. து. அன்புச்செழியன், வீராசாமி எம்.எல்.ஏ., மா. இராசகோபால், ஏ. சாக முத்தையா பி. ஆறுமுகம் ஆகியோர் பேசினர்.

பேராசிரியர் நன்றி தெரிவித்துச் சிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் அவர்களுக்கும், வீராசாமி எம்.எல்.ஏ. அவர்களுக்கும் பம்பாய் தி. மு. க., பாண்டுப் தி. மு. க., தானா தி. மு. க, மாதுங்கா தி. மு. க., சோக்கேசுவரி தி. மு. க., தாராவி தி. மு. க., மாதுங்கா பூக் கட்டும் தோழர் இராமு, மற்றும் தனிப்பட்டவர்கள் பலரின் சார்பிலும் கைத்தறி ஆடைகளும் -- மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தோழர் சி. என். மணி, வேலைப்பாடு அடங்கிய சால்வையைப் பேராசிரியர் அவர்களுக்கு அணிவித்தார்.

5—10—68 காலை 6-30 மணிக்கு இயக்கத் தோழர்கள் பலர் வழியனுப்பிவைக்க, பேராசிரியர் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டார்.

6—10—68 காலை 10-மணிக்கு தாராவி தி. மு. க. சார்பில் வீராசாமி எம்.எல்.ஏ. அவர்களுக்குச் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது; தோழர்கள் தொ. து. அன்புச்செழியன், மா. இராசகோபால், ஆரியசங்காரன், பொற்கோ, சின்னப்பா, தியாகராசன், மற்றும் துணைமன்றத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டு பேசினர்.

அஞ்சல் துறைகளில் புதிய திட்டங்கள்

தமிழ் நாட்டில் மேலும் தொலைபேசி இணைப்புகள்

சென்னை, அக். 17—

"துரித விரிவுத் திட்டத்தின்கீழ், அடுத்த 12 திங்களுக்குள் சென்னை நகரில் மேலும் 4,900 தொலைபேசி இணைப்புகள் ஏற்படும்"

என்று, மத்திய அரசின் அஞ்சல் -- தந்தி துணையமைச்சர் குஜ்ரால் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"தமிழ்நாட்டில் அஞ்சல் -- தந்தி வசதிகள் வளர்ச்சி பற்றிச் செய்வதற்கான புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன.

இப்போது சென்னை, மதுரை, திருச்சி ஆகிய நகரங்களில் மட்டும் இரவு நேர அஞ்சல் அலுவலகங்கள் இயங்கிவருகின்றன; இனி கோவையிலும் இரவு நேர அஞ்சல் அலுவலகம் திறக்கப்படும்.

சென்னை — செங்கற்பட்டு; சென்னை — திருச்சி; சென்னை — கோவை; சென்னை—மதுரை ஆகிய நகரங்களுக்கு நேரடி தொலைபேசி வசதி ஏற்படும்; இனி, தொலைபேசி எண்ணைச் சுற்றினால், இந்நகரங்களுடன் நேரடியாகத் தொடர்பு ஏற்பட்டுவிடும்.

திருநெல்வேலி, சேலம், காரைக்குடி, விருதுநகர், தஞ்சாவூர், வேலூர், மதுரை ஆகிய ஊர்களுக்கு தந்திப் போக்குவரத்தில் நவீன வளர்ச்சி முறைகள் செய்யப்படவிருக்கின்றன."

அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்

அறிஞர் அண்ணா உடல் நலம்பெற விழைவு

அந்தியூர் ஊராட்சி ஒன்றியக் குழுவின் சாதாரணக் கூட்டம் 5—4—68 அன்று தலைவர் திரு. கே. கே. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, நியூயார்க் நகரில் சிகிச்சை பெற்றுவரும் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் விரைவில் முழு நலம் பெற்றுத் தமிழகம் திரும்பி வரவேண்டும் என்று இம்மன்றம் தனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டது.

கூட்டத்தில் மொத்தம் 43 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்திற்கு அந்தியூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.எம். நடராசன், திரு. டி. கே. வெங்கடாசலம் அவர்களும் கலந்துகொண்டனர்.

இராணி அண்ணா நகர் குடிசை வாழ்வோர் மன்றம்

21—9—68-ல், சென்னை 56-வது வட்ட தி.மு.க. அவைத் தலைவர் ஆ. சண்முகம் தலைமையின்கீழ் குடிசை வாழ்வோர் பொது நல மன்ற நிர்வாகிகள் தேர்வுக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: ஏ. பி. பி. வேலு; துணைத் தலைவர்: ஏ. பச்சையப்பன்; செயலாளர்: எஸ். எம். இரத்தினம்; துணைச் செயலாளர்: என். எம். சாமி; பொறுப்பாளர்: எம். ஜி. மணி.

'அண்ணா கலை மலர்'

ஓர் வேண்டுகோள்

நாடகத்தின் வாயிலாக புதிய கருத்துக் கலையைத் தொடங்கி வைத்து வளர்த்தவரும் கட்டிக் காத்தவருமான நமது குடும்பத் தலைவர் அறிஞர் அண்ணா அவர்களின் படைப்பாற்றலும் -- பணியும் -- அவற்றின் பண்பும் பயனும் விளக்கிடவும், அவர் தம் அடியினை ஒட்டி சமுதாயப் புரட்சி நாடகம் வரைந்தோர் -- நடித்தோர் -- மற்றும் பல கலைத் துறையிலும் பணிபுரிவோர் வரலாற்றினைத் தொகுத்துக் காட்டவும் மலர்வது 'அண்ணா கலை மலர்'.

எனது விருப்பினையும் வேண்டுகோளையும் ஏற்றுப் பல நண்பர்கள் கட்டுரைகளும், வரலாறுகளும் அனுப்பியுள்ளனர்; எனினும் முழுமையும் கிடைக்கவில்லை.

நமது கருத்துப் பிரச்சாரத்திற்கென்று நாடகம் தீட்டியோரும் நடித்தோரும், கலை நிகழ்ச்சி நடத்தியோரும் மாவட்டந்தோறும் இருக்கின்றனர்; அவர்கள் செய்த கலையாக்கம் பற்றிய விவரமும், வாழ்க்கைக் குறிப்பும் புகைப் படமும் தேவை.

"தயைசெய்து பயில் முறை -- தொழில் முறை நடிகர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனைவரும் விரைவில் அனுப்பி உதவி—எங்கள் முயற்சிக்கு ஊக்கமும், ஆக்கமும் தருமாறு பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்" என்று, சலகை ப. கண்ணன் அறிவிக்கிறார்.

முகவரி:— வள்ளுவர் கலையகம், 768, திருவல்லிகேணி நெடுஞ் சாலை, சென்னை-5.

கலைக் குழு முகவரி

மதுரை நாவலர் கலைக் குழுவினரின் 'சழகத்தின் சாதனை -- காங்கிரசுக்கு வேதனை' எனும் கலை நிகழ்ச்சி நடத்த விரும்பும் கழகத் தோழர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தொடர்புகொள்க:—

நாவலர் கலைக் குழு,
கருப்பையா—பாலன்,
16, இசுமாயில்புரம்
12-வது தெரு,
முனிச்சாலை, மதுரை-9.

சிவகாசி கருணாநிதி மன்றம்

சிவகாசி கருணாநிதி மன்றப் புதிய நிர்வாகிகள் தேர்தல், 6—10—68-ல், நகர தி. மு. க. செயலாளர் துரைக்கண்ணன் தலைமையில் நடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்டோர்:—

அவைத் தலைவர்: செ. பாலகிருஷ்ணன்; செயலாளர்: எஸ் மாரியப்பன்; துணைச் செயலாளர்: இரா. சங்கீத திலகம்; பொருளாளர்: இரா. குருசாமி; செயற்குழு உறுப்பினர்கள்: எட்வின், முத்துசாமி என்ற மணி, வி. எஸ். கே. சொர்ண பெருமாள், எஸ். மகாலிங்கம், அ. வேலாயுதம், டி. எம். நடராசன், எஸ். குருசாமி.

செய்தி அனுப்புவோர் கவனிக்க :

'நம் நாடு' இதழில் வெளியிடுவதற்கென அனுப்பப்படும் செய்திகள் யாவும் சுருக்கமாகவும், தெளிவாகவும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதியனுப்பப்பட வேண்டும்.

கழக சம்பந்தமான செய்திகளும், துணைமன்றச் செய்திகளும் கிளைக் கழகச் செயலாளரின் கையொப்பம் பெற்று அனுப்பப்பெற வேண்டும்.

—ஆசிரியர்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கருணை மனு அனுப்பும் உரிமை பெற்றுள்ளனர்.

இந்தியாவில் மரண தண்டனை விதிக்கப்படுவதற்கும் அது நிறைவேற்றப்படுவதற்கும் இடையே ஆறுமாத காலம் அவகாசம் கொடுப்பதற்கு ஏற்கனவே வகை செய்யப்பட்டிருக்கிறது.

மரண தண்டனை சம்பந்தமான பிரச்சினை முழுவதையும் இந்தியச் சட்டக் குழு விரிவாக ஆராய்ந்து வருகிறது.

மரண தண்டனையை அறவே நீக்கும் பிரச்சினைபற்றி விரிவாக ஆராயவேண்டும்."

மறைவு

பொன்னேரி வட்ட தி. மு. க. துணைச் செயலாளரும் சின்ன ஓபுளாபுரம் கிளைக் கழகச் செயலாளருமான சி. ஏ. கலைமணி அவர்களின் இளைய மகன் 10—10—68-ல் இயற்கையெய்தியது குறித்து கழகச் சார்பில் அனுதாபமும் ஆறுதலும் தெரிவிக்கப்படுகிறது.

சேரிகளின் சீர்திருத்தப் பணிக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள்

பணம் ஒதுக்கியும் திட்டம் நிறைவேறுவதில் தாமதமேன்?

அமைச்சர் மதியழகன் நிலைமை விளக்கம்

சென்னை, அக். 17—

"சேரிகளை அறவே ஒழித்துவிட இயலாவிட்டாலும், குறைந்த அளவு வாழ்க்கை வசதிகளான குடிநீர், விளக்குகள், சாக்கடை மற்றும் சுகாதார வசதிகள் போன்றவற்றையாவது அவர்களுக்குச் செய்துதர வேண்டும்; மாநகராட்சிக்குப் போதிய நிதி வசதி இல்லாததால் இந்த வசதிகள் அனைத்தையும் செய்துதரும் நிலையில் அது இல்லை.

"சேரிகளை மேம்பாடு செய்யும் முயற்சியில் மற்றும் சில சங்கடங்களும் இருக்கின்றன; தனிப்பட்டவர்களுக்குச் சொந்தமான நிலங்களில் உள்ள சேரிகளில் தீப்பிடிக்க இயலாத வீடுகள் கட்டுவதற்கு அரசு முயன்றால், சிலர் இதனை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடருகின்றனர்"

இவ்வாறு, சேரி சீர்திருத்தத்திற்காகப் புதிதாக நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழுவின் முதல் கூட்டத்தில் பேசுகையில் அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் விளக்கிக் கூறினர். அவர் சுட்டிக் காட்டியதாவது :—

"குடிசைவாழ் மக்களுக்கு வசதிகள் செய்து தருவதற்குப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

சேரிகள் பிரச்சினை, பெரிய நகரங்களுக்குத் தவிர்க்க இயலாததாகவும், சிக்கலானதாகவும் அமைந்துவிடுகிறது.

நகரங்களில் நிலம் கிடைப்பதில் உள்ள சங்கடம், நிலத்தின் விலை பெரும் அளவு உயர்ந்திருப்பது -- கிராமப்புறங்களிலிருந்து மக்கள் குடியேறுவது -- பொது மக்களுக்கான சுகாதார வசதிகள் முழுவதையும் மாநகராட்சி செய்துதர இயலாத நிலைமையில் இருப்பது -- இப்போது விதிக்கப்பட்டுள்ள வீட்டு வரி அமைப்புகள் ஆகியவையே சேரிப் பெருக்கத்திற்குக் காரணமாகும்.

தொழில் அதிபர்கள், தங்கள் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்காததாலும் இந்தப் பிரச்சினை சங்கடமாகிறது.

கடந்த 10 ஆண்டுக் காலத்தில் சேரிச்சீர்திருத்தத்திற்காகரூ. 4½ கோடி செலவு செய்யப்பட்டு வருகிறது; இன்னும் 8 கோடியே 60 இலட்சம் ரூபாய் பெறுமான சேரி சீர்திருத்தத் திட்டங்கள் செயலில் இருக்கின்றன.

சேரி சீர்திருத்த வேலைகளை அரசு மட்டும் செய்துவிட முடியாது; ஏனைய சமூகப் பணி அமைப்புகளின் உதவியும் இதற்குத் தேவையாகும்.

சேரிகள் பெருகிவருவதையும், அவற்றில் தீப்பிடிப்பதையும் பார்த்து, முதலமைச்சர் அண்ணா அவர்கள் வேதனை அடைந்தார்; அதன்பேரில்தான், சேரி சீர்திருத்தத்துக்காக சமூக சேவை சங்கங்களின் ஒத்துழைப்பையும் நாடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

இப்போது அமைக்கப்பட்டுள்ள குழு, அரசியல் அதிகாரப் பற்று இல்லாதது.

ஒவ்வொரு சமூகப் பணி அமைப்பும் தனக்கென்று ஒரு சேரிப் பகுதியை தேர்ந்தெடுத்து அதில் முழு கவனம் செலுத்தி -- அந்த மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை நேரில் சென்று அறிந்து -- சீர்திருத்தம் வேலையில் ஈடுபடவேண்டும்.

அவர்கள்" செய்யும் வளர்ச்சிப் பணிகள், பொதுமக்களுக்கு ஏற்றதாக இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் செய்ததெல்லாம் வீணாகிவிடும்!

குழுவின் அடிப்படையான முதல் பணி, சேரிவாழ் மக்களுடன் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு -- அவர்களுக்கு உதவி செய்வதில் தங்களுக்குள்ள அக்கறையை அவர்கள் உணரும் படிச் செய்வதேயாகும்.

நகரில் சேரிகள் பெருகுவதைத் தடுக்கவேண்டியது அவசியமாதலால், குழுவிலுள்ள அதிகாரிகளும், உத்தியோகப் பற்றற்றவர்களும் கூடிக் கலந்தாலோசித்துப் பிரச்சினைக்கு ஒரு பரிகாரம் காணவேண்டும்.

சேரியில் வேலை இல்லாமல் இருப்பவர்களுக்கு வேலை வாங்கிக் கொடுப்பதும் இந்தக் குழுவின் முக்கிய வேலைகளில் ஒன்ருக இருக்கவேண்டும். அரசும் இதுபற்றிக் கவனம் செலுத்தி வருகிறது."

கூட்டத்தில் பல்வேறு சமூக சேவை சங்கப் பிரதிநிதிகளும், மாநகராட்சி, போலீசு மற்றும் அரசு இலாகாக்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள்.

நடைபாதைவாசிகள் பிரச்சினைகள் பற்றியும் பேசப்பட்டது; 'வியாசர்பாடியில் இருக்கும் பர்மா தமிழர்களுக்கு அங்கேயே குடியிருக்க வீட்டு வசதி செய்து வேண்டும்' என்ற கோரிக்கையை, குழு உறுப்பினர் பி. ஏ. ஞானம் வலியுறுத்தினர்.

இந்தக் குழு உறுப்பினர்கள் இன்னும் 2-வார காலத்திற்குள் சேரிகளை நேரில் சென்று பார்வையிடுவார்கள்; அடுத்து 2-வார காலத்திற்குள் அறிக்கை அளிப்பார்கள்; அதன்பேரில் சேரி வளர்ச்சிக்கான திட்டங்கள் தீட்டப்படும்.

நவம்பர் முதல் வாரத்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே, அநேகமாக நவம்பர் திங்கள் முதல் வாரம் சென்னை புறப்படலாம் என்று கருதுகிறேன்.

மாநகராட்சித் தேர்தல் சமயத்தில் எனது தொண்டினைச் செலுத்த இயலாத நிலை, வருத்தம் அளிக்கிறது; என்றபோதிலும்,நீங்கள் யாவரும் முனைந்து பணியாற்றி வெற்றி தேடித் தருவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மகிழ்ச்சியை யூட்டுகிறது.

இங்கு இராணி, பரிமளம், செழியன், இராசாராம், டாக்டர் சதாசிவம் ஆகியோர் மிகவும் அக்கறையுடன் என்னைக் கவனித்துக்கொள்கிருர்கள்.

என் உடல் நிலை பற்றிய கவலை, நமது தோழர்களுக்கு இருக்கத் தேவையில்லை என்பதைக் கூறவும்.

'சரியான சமயத்தில் வந்தீர்கள்' என்று மருத்துவர்கள் கூறி -- நேர்த்தியான முறையில் சிகிச்சைகள் அளித்து -- கவலையையும் கலக்கத்தையும் போக்கி விட்டனர்.

இங்குள்ள இந்தியத் துதுவர் நண்பர் ஜி. பார்த்தசாரதி அவர்கள் எங்களைத் தங்கள் குடும்பத்தினராகக்கொண்டு எல்லா உதவிகளையும் பரிவுடன் தந்துவருகிருர்கள்.

எல்லா நண்பர்களுக்கும் என் அன்பினையும் வணக்கத்தினையும் தெரிவிக்கவும்.

மாநகராட்சிப் பள்ளித் திறப்பு விழா

சென்னை 32-வது வட்டம் வியாசர்பாடி மூர்த்திங்க ஐயர் தெருவில் உள்ள மாநகராட்சிப் பள்ளியின் துணைக் கட்டிடத்தை தி.மு.க. அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. திறந்து வைப்பார்; இந்த விழா, 18-10-68 மாலை 5 மணிக்கு, மேயர் டாக்டர் அபிபுல்லா பேக் தலைமையில் நடைபெறும்.

வானொலியில் 'கொல்லிப் பாவை'

20—10—68 பிற்பகல் 3-30 மணி முதல் 4-30 மணிவரை வானொலியில், சலகை ப. கண்ணன் அவர்கள் வரைந்துள்ள 'கொல்லிப் பாவை' என்ற தமிழக வரலாற்று நாடகம் நடைபெறுகிறது.

வில்லாண்மையில் சிறந்த கொங்கு நாட்டு மன்னன் வள்ளல் ஓரியின் பெருமையும், பழந்தமிழ்ச் சிந்தர்களின் மெய்ஞானமும் விளக்கிடும் இந்தப் புதுமையான நாடகத்தில், கிம்சி. சீனிவாசன், கே. கே. பெருமாள், கே. என். சிவ காளத்திலிங்கம், சத்தியமூர்த்தி, வெங்கடேசன், கே. விசயா, எல். சானகி ஆகியோர் நடிக்கின்றனர்.

திருச்சி நிலயத்தில் நடைபெறும் இந்நாடகம் சென்னையிலும் அஞ்சல் செய்யப்படுகிறது.

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

18--10--68

சென்னை 91-வது வட்டம்

தி. மு. க. வேட்பாளர் எஸ்.வி. வேலுவை ஆதரித்து இரவு 7-மணிக்கு வீரபெருமாள் முதலி தெருவில்; தலைவர்: கோ. கன்னியப்பன்; பேசுவோர்: அமைச்சர் மு. கருணாநிதி, இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ, முரசொலி மாறன் எம்.பி., ஜார்ஜ் கோமகன், டி. எம். சண்முகம், கு. மா. பாலசுப்பிரமணியம், மயிலை மாறன், பிரியாதுரை, எம். கே. காளத்தி, பி. சீனிவாசன், மு. சீனிவாசன், டி. கோவிந்தன், ஆர். சி. கே. சாமி, டி. அரங்கநாதன்.

சென்னை 24-வது வட்டம்

கழக வேட்பாளர் சு. மோகனராசை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம்; இரவு 8 மணிக்கு மேயர் டாசுதேவ் தெருவில்; தலைவர்: து. வேணுகோபால் எம்.சி.; பேசுவோர்: அமைச்சர் கருணாநிதி, ஜி. குசேலர் எம்.பி., எம். ஆர். கண்ணன் எம்.எல் ஏ., இளம்பரிதி, ம. மோகனரங்கம், என். ஆர். வீரஜின்னு, இராசரத்தின நாயகர், ஏ. இராமலிங்கம், கே. எம். தீனதயாளன், ந. சு. மணி.

சுப்பிரமணியம் உறுதிமொழியை யார் நம்புவது?

சென்னை, அக். 17—

"தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர் சி. சுப்பிரமணியம் அவர்கள், சென்னை நகரத்து மக்களுக்கு ஓர் உறுதிமொழியைத் தந்திருக்கிருர்.

> "மாநகராட்சித் தேர்தலில் காங்கிரசுக்காரர்களைத் தேர்ந்தெடுத்தால், அவர்கள் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்வேன்."

இதுதான் அவர் தந்த உறுதிமொழி! இந்த உறுதிமொழியைப் பற்றி எனக்கு இரண்டு மூன்று சந்தேகங்கள் தோன்றுகின்றன.

"முதல் சந்தேகம்:—'காங்கிரசுக்காரர்கள் தவறு செய்யாமல் பார்த்துக்கொள்வேன்' என்று அவர் சொல்வதன் மூலம், 'காங்கிரசுக்காரர்கள் தவறு செய்பவர்கள் -- தவறு செய்பவர்கள்' என்று முன்கூட்டியே சுப்பிரமணியம் சொலகிருரா?

"இரண்டாவது சந்தேகம்:—தவறு செய்யாமல் பார்த்துக்கொள்வதாகக் கூறும் சுப்பிரமணியம், அத்தனை நாள்வரை தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவராக இருப்பாரா? காமராசர் அது வரை அவரை விட்டுவைப்பாரா?

"மூன்ருவது சந்தேகம்:—இவரது உறுதிமொழிகட்குக் காங்கிரசில் மதிப்பு இருக்கிறதா? இவரது பேச்சைக் கேட்கக்கூடியவர்கள் யாராவது காங்கிரசில் இருக்கிருர்களா என்பதற்கு அறிகுறியோ, அடையாளமோ, சான்ருே இருக்கிறதா?

"ஏனென்ருல், அறிஞர் அண்ணா அவர்கள் அமெரிக்காவிற்குச் சென்றபோது அவர், 'அண்ணா அவர்களின் மனம் புண்படும் படியாக எழுதவோ பேசவோ கூடாது' என்று அறிக்கை விடுத்தார்; ஆனல் அவரது அறிக்கையை யாரும் மதிக்கவில்லை! பகிரங்கமாகக் கூட்டத்திலேயே, 'இவர் யார் அறிக்கை விட?' என்றுகூடக் கேட்டார்கள்! சுப்பிரமணியத்தின் அறிக்கைக்குக் காங்கிரசுக்காரர்கள் கொடுத்த மதிப்பு இது!

"அடுத்தபடியாக சி. சுப்பிரமணியம் அவர்கள், இன்னொரு அறிக்கை விடுத்தார்!

> "காங்கிரசுக்காரர்கள் ஒருவருக்கொருவர் பகிரங்கமாக மேடையிலோ, பத்திரிகையிலோ தாக்கிப் பேசிக்கொள்ளக்கூடாது; அப்படித் தாக்கிப் பேசினுல், கடுமையான நடவடிக்கை எடுப்பேன்"

இதுதான் அந்த அறிக்கை; இந்த அறிக்கை வந்த மறுநாளே திருச்சியில் காமராசர் கோஷ்டியைச் சார்ந்தவர்கள், சுப்பிரமணியம் கோஷ்டியைத் தாக்கிப் பேசினுர்கள்!

"பத்து நாள் கழித்து சுப்பிரமணியம் கோஷ்டியைச் சார்ந்த பொள்ளாச்சி மகாலிங்கம், நிருபர்கள் கூட்டமொன்றில், 'காமராசருக்கும் சுப்பிரமணியத்திற்கும் கருத்து வேறுபாடு இன்று நேற்றல்ல—பல ஆண்டுகளாக இருந்து வருகிறது; காமராசர் காங்கிரசைவிட்டு வெளியேறினுல்தான் காங்கிரசு உருப்படும்' என்று கூறினர்.

"இப்படி, சுப்பிரமணியம் அறிக்கையைக் காமராசர் கோஷ்டியும் மதிக்கவில்லை --- சுப்பிரமணியம் கோஷ்டியும் மதிக்கவில்லை!

> "இவ்விதம் சுப்பிரமணியத்தின் அறிக்கையை அவருடைய கட்சிக்காரர்களே மதிக்காதபோது, சென்னை நகரத்து மக்கள் எப்படி உறுதிமொழியை நம்பப்போகிருர்கள்?

"மொழிப் பிரச்சினை குறித்துத் தென்னகம் கொதித்து எழுந்தபோது பண்டித நேரு அவர்கள் ஓர் உறுதிமொழி தந்தார்; அந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை: பண்டித நேருவின் வாக்குறுதிக்கே இந்தக் கதி என்ருல், சுப்பிரமணியத்தின் வாக்குறுதியை யார் நம்புவது! அமெரிக் கல்லே ஆடிக் காற்றில் பறக்கும் என்ருல், இந்த இலவம் பஞ்சு எம் மாத்திரம்?"

—மு. கருணாநிதி

(தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில்)

கார் விபத்தில் கோ. சி. மணி

சென்னை, அக். 16—

தமிழக மேலவை உறுப்பினர் கோ. சி. மணி அவர்கள் இன்று ஆடுதுறையிலிருந்து சென்னைக்குக் காரில் வந்துகொண்டிருந்தபோது வழியில் கார் விபத்திற்குள்ளானர்.

இந்த விபத்து, செங்கற்பட்டுக்கும்—மதுராந்தகத்துக்கும் இடையில் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

தோழர் கோ. சி. மணி, தலையிலும் தோளிலும் காயமுற்றுள்ளார்; அவருடன் வந்த மூவரும் காயமடைந்துள்ளனர்.

அனைவரும் செங்கற்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபின் இன்று இரவு சென்னைத் தலைமை மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்டனர்.

இன்று இரவு 9-30 மணியளவில் தேர்தல் பிரசாரங்களுக்கிடையே அமைச்சர் கருணாநிதி அவர்கள், மருத்துவமனைக்குச் சென்று கோ. சி. மணியைப் பார்த்தார்.

மற்றும் அங்கு சிகிச்சைபெற்று வரும் கொளத்தூர் கோதண்டம் எம்.எல்.ஏ., ஆறுமுகம் எம்.எல் ஏ. இராகவானந்தம் எம்.எல்.சி. ஆகியோரையும் கண்டு நலம் விசாரித்தார்.

கலை நிகழ்ச்சி

சென்னை 60-வது வட்ட தி மு.க. சார்பில் 19—10—68 இரவு 9 மணிக்கு புரசை சுந்தரம் பிள்ளை தெருவில் -- திரு. இராமசாமி தலைமையில், குமாரி விசயாவின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

காணவில்லை

குமாரசாமி என்னும் ஐந்து வயதுச் சிறுவனைக் காணவில்லை; பெரிய விரல் இரண்டையும் வாயில் வைத்தபடி இருப்பான்; சிவப்பு நிறம்; தலை குடுமி.

காணுபவர்கள் கீழ்க்காணும் முகவரிக்குத் தகவல் கொடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

முகவரி:— எஸ். சுப்பிரமணி, 56, சின்னராசுபிள்ளை தோட்டம், கோடம்பாக்கம், சென்னை-24.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக. திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-10) [illegible] வெளியிடப்பெற்றது.